# அலகு – 2

# *காப்பிய இலக்கியம்*

# *சிலப்பதிகாரம்*

**காப்பியம்**:

காப்பியம் என்பது காப்பு+இயம் - காப்பியம் என்று பிரிக்கப்படுகிறது. ‘காப்பு’ என்றால் காத்தல், ‘இயம்' என்றால் சொல்லுவது ஆகவே பழம் மரபுகளைக் காத்து சொல்லப்படுவது காப்பியமாகும்.

**காப்பிய வகை:**

காப்பியம் பல்வேறு வகைகளாகப் பிரிக்கப்பட்டாலும் பொதுப்படையாகத் தமிழில் இரண்டாகப் பிரிக்கலாம். அவை பெரும்காப்பியம், சிறுகாப்பியம் எனப்படும்.

பெரும்காப்பியம் வகை - 5 அவை

1. சிலப்பதிகாரம்
2. மணிமேகலை
3. சீவகசிந்தாமணி
4. வளையாபதி
5. குண்டலகேசி

என்பன இவை அறம், பொருள், இன்பம், வீடு என்று சொல்லப்படும் நான்கு உறுதிப் பொருட்களை உள்ளடக்கி எழுதப்பட்டதால் பெருங்காப்பியமாகத் திகழ்கிறது.

சிறுகாப்பிய வகை - 5 அவை

1. உதயணகுமார காவியம்
2. நாககுமார காவியம்
3. யசோதர காவியம்
4. நீலகேசி
5. சூளாமணி

என்பன இவை அறம், பொருள், இன்பம், வீடு என்று சொல்லப்படும் உறுதிப் பொருட்கள் நான்கினுல் ஒன்றோ, பலவோ குறைந்து வந்தால் அது சிறுகாப்பியம் என்று வழங்கப்படுகிறது.

**சிலம்பு:**

சிலம்பு என்பது ஓர் அணிகலன். மகளீர் காலில் அணிவது, சிலம்பை மையமாகக் கொண்டு எழுதப்பட்டதால் சிலப்பதிகாரம் ஆனது. இந்நூலில் இருவர் சிலம்புகள் இடம் பெறுகின்றன.

கண்ணகி சிலம்பு - இதன் உள் இருப்பது மாணிக்கம்

பாண்டிமாதேவி சிலம்பு - இதன் உள் இருப்பது முத்து

இருவர் சிலம்பின் புற அமைப்பு ஒன்றாக இருந்ததன் காரணமாகவே இந்நூல் தோன்றியது.

**ஆசிரியர் குறிப்பு:**

சிலப்பதிகாரத்தின் ஆசிரியர் இளங்கோவடிகள். இவர் காலம் கி.பி.2 ஆம் நூற்றாண்டு இவர் தந்தை - சேரமன்னன் சேரலாதன், தாய் - நற்சோணை, தமையன் - சேரன் செங்குட்டுவன். சமயம் சமணசமயம் இவர் அரச வாழ்கையைத் துறந்து துறவியாகி குணவாயிற் கோட்டம் என்ற சமணப்பள்ளியில் தங்கியிருந்தார். கண்ணகி வரலாற்றை சாத்தனார் சொல்ல இளங்கோவடிகள் எழுதினார் என்பர்.

**நூலமைப்பு:**

இது மூன்று காண்டம் முப்பது காதைகளைக் கொண்டது.

1. புகார்க் காண்டம் - 10 காதைகள்
2. மதுரைக் காண்டம் - 13 காதைகள்
3. வஞ்சிக் காண்டம் - 7 காதைகள்

மங்கல வாழ்த்து காதையில் தொடங்கி வரந்தருக் காதையில் முடிவடைகிறது.

**சிலம்பின் வேறுபெயர்:**

முத்தமிழ்க் காப்பியம், குடிமக்கள் காப்பியம், புதுமைக் காப்பியம், பொதுமைக் காப்பியம், உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள், நாடகக் காப்பியம், ஒற்றுமைக் காப்பியம், தேசியக் காப்பியம், புரட்சிக் காப்பியம், வரலாற்றுக் காப்பியம், மூவேந்தர் காப்பியம் என்று பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுகிறது.

**சிறப்புகள்:**

சிலப்பதிகாரம் வாழ்வியலின் மிகப்பெரும் மூன்று உண்மைகளை உணர்த்துகிறது.

1. அரசியல் பிழைத்தார்க்கு அறங்கூற்ற மாவதும்
2. உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்
3. ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும் என்பதும்

மேலும் பாரதியார் இந்நூலினை " நெஞ்சை யள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணி ஆரம் படைத்த தமிழ்நாடு" என்று பாராட்டுகிறார். சிலப்பதிகாரத்திற்கு பழைய உரை எழுதப்பட்டுள்ளது. அடியார்க்கு நல்லார் உரை, அரும்பத உரை போன்றனவும் எழுந்துள்ளன. இதில் அடியார்க்கு நல்லார் உரையே சிறந்தது என்று போற்றப்படுகிறது.

**ஆச்சியர் குரவை:**

'குரவை' என்பது ஏழு அல்லது ஒன்பது பெண்கள் சேர்ந்து இறைவனைப் பாடியாடும் ஒருவகைக் கூத்து வகையைச் சார்ந்தது. ஆச்சியர்கள் கூடிக் குரவைக் கூத்து நிகழ்த்தலால், இது ஆச்சியர் குரவை எனப்படும்.

## அரசனுக்கு நெய் வழங்கும் முறை

*'கயல் எழுதிய இமய நெற்றியின்*
*அயல் எழுதிய புலியும் வில்லும்*
*நாவல் அம் தண் பொழில் மன்னர்*
*ஏவல் கேட்ப, பார் அரசு ஆண்ட*
*மாலை வெண்குடைப் பாண்டியன் கோயிலில்*
*காலை முரசம் கனை குரல் இயம்பும்; ஆகலின்,*
*நெய்ம் முறை நமக்கு இன்று ஆம்' என்று,*
*ஐயை தன் மகளைக் கூஉய்,*
*கடை கயிறும் மத்தும் கொண்டு,*
*இடை முதுமகள் வந்து தோன்றும்-மன்.*

பாண்டியன் தன் மீன் கொடிச் சின்னத்தை இமயமலையில் எழுதினான். அதன் பக்கத்தில் சோழன் புலிச் சின்னத்தையும், சேரன் வில் சின்னத்தையும் எழுதினர். இப்படி நாவலந் தண்பொழில் முழுவதும் தன் ஏவலைக் கேட்டு நடக்கும்படி நாடாண்டவன் பாண்டியன். அவன் அரண்மனையில் காலை முரசம் முழங்கும் ஒலி கேட்கிறது. அரண்மனைக்கு இன்று நெய் வழங்கவேண்டிய முறை

"நம்முடையது" என்று எண்ணிய இடையர் குல முதுமகள் மாதரி தன் மகள் ஐயையை கூவி அழைத்துக்கொண்டு, தயிர் கடைவதற்காக மத்தும் கயிறும் எடுத்துக்கொண்டு சென்றாள்.

## தீயநிமித்தம் தோன்றுதல்

*குடப் பால் உறையா; குவி இமில் ஏற்றின்*
*மடக் கண் நீர் சோரும்; வருவது ஒன்று உண்டு!*

*உறி நறு வெண்ணெய் உருகா; உருகும்*
*மறி, தெறித்து ஆடா; வருவது ஒன்று உண்டு!*

*நால் முலை ஆயம் நடுங்குபு நின்று இரங்கும்;*
*மால் மணி வீழும்; வருவது ஒன்று உண்டு!*

பிறை ஊற்றி வைத்திருந்த குடத்தில் பால் உறையவில்லை.
காளை மாட்டின் கண்களில் கண்ணீர் வடிந்தது.
உறியில் இருந்த வெண்ணெய் உருகவில்லை.
கன்றுக்குட்டி பால் குடிக்கத் தன் தாயிடம் துள்ளி ஓடவில்லை.
நான்கு முலைகளை உடைய பசுக்கள் நடுங்கிக்கொண்டு கத்தின.
அவற்றின் கழுத்தில் இருந்த மணி அறுந்து விழுந்தது.
இந்த நிகழ்வுகளைப் பார்த்தால் ஏதோ தீங்கு வரப்போகிறது - என மாதரி மகளிடம் கூறினாள்.

### கருப்பம்

*'குடத்துப் பால் உறையாமையும்,*
*குவி இமில் ஏற்றின்*
*மடக் கண் நீர் சோர்தலும்*
*உறியில் வெண்ணெய் உருகாமையும்,*
*மறி முடங்கி ஆடாமையும்,*
*மால் மணி நிலத்து அற்று வீழ்தலும்,*
*வருவது ஓர் துன்பம் உண்டு' என,*
*மகளை நோக்கி, 'மனம் மயங்காதே!*
*மண்ணின் மாதர்க்கு அணி ஆகிய*
*கண்ணகியும்-தான் காண,*
*ஆயர் பாடியில், எரு மன்றத்து,*
*மாயவனுடன் தம்முன் ஆடிய*

*வால சரிதை நாடகங்களில்,*
*வேல் நெடுங் கண் பிஞ்ஞையோடு ஆடிய*
*குரவை ஆடுதும் யாம்' என்றாள்-*
*'கறவை, கன்று, துயர் நீங்குக எனவே,'*

குடத்தில் பால் உறையாமை.
காளை மாட்டின் கண்ணில் கண்ணீர் வடிதல்,
உறியில் வெண்ணெய் உருஉகாமை,
கன்று பால் குடிக்காமல்

இவற்றைக் கண்டு வருவது ஓர் துன்பம் உண்டு என்று மனம் மயங்க வேண்டாம்.
மண்ணிலுள்ள பெண்களுக்கெல்லாம் அணிகலனாக விளங்கும் கண்ணகி காணுமாறு குரவை ஆடுவோம்.
ஆயர்பாடியில் அன்று எருமன்றத்தில் மாயவனுடன் அவன் அண்ணன் ஆடிய வாலசரிதை நாடகங்களில் பிஞ்ஞையோடு ஆடிய குரவை ஆடுவோம்.
கறவை, கன்று ஆகியவற்றின் துயரைக் களைய வேண்டும் என்று வேண்டிக்கொண்டு ஆடுவோம் - என்று மாதரி தன் மகள் ஐயையிடம் கூறினாள்.

## கொளூ

*'காரி கதன் அஞ்சான் பாய்ந்தானைக் காமுறும், இவ்*
*வேரி மலர்க் கோதையாள்;*

*நெற்றிச் செகிலை அடர்த்தாற்கு உரிய, இப்*
*பொன் தொடி மாதராள் தோள்.*

*மல்லல் மழ விடை ஊர்ந்தாற்கு உரியள், இம்*
*முல்லை அம் பூங் குழல்-தான்.*

*நுண் பொறி வெள்ளை அடர்த்தாற்கே ஆகும், இப்*
*பெண் கொடி மாதர்-தன் தோள்.*

*பொன் பொறி வெள்ளை அடர்த்தாற்கே ஆகும்: இந்*
*நன் கொடி மென்முலை-தான்.*

*வென்றி மழ விடை ஊர்ந்தாற்கு உரியவள், இக்*
*கொன்றை அம் பூங் குழலாள்.*

*தூ நிற வெள்ளை அடர்த்தாற்கு உரியள், இப்*
*பூவைப் புது மலராள்.*

குரவை ஆட்டத்தின் கொள்கை

எந்தப் பெண் யாருக்கு உரியவள் என்று சுட்டிக்காட்டி நிறுத்துதல்

1. தேன்மலர் சூடிய இவள் காரிக் காளையை அடக்கியவனை விரும்புவாள்.
2. பொன்வளையல் அணிந்த இவள் தோள் நெற்றியில் செஞ்சுழி உடைய காளையை அடக்கியவனுக்கு உரியது.
3. முல்லைப் பூ சூடிய இவள் கொழுத்த காளைமேல் ஏறி வருபவனுக்கு உரியவள்.
4. இந்தப் பெண்ணின் தோள் சின்னச் சின்ன புள்ளி கொண்ட வெள்ளைக் காளையை அடக்கியவனுக்கு உரியது.
5. இந்த மென்முலையாள் பொன்னிறப் புள்ளி கொண்ட வெள்ளைக் காளையை அடக்கியவனுக்கு உரியவள்.
6. கொன்றைப் பூ சூடிய இவள் பலரை வெற்றி கண்ட கொழுத்த காளையை அடக்கியவனுக்கு உரியவள்.
7. காயாம்பூ அணிந்த இவள் தூய வெள்ளை நிறக் காளையை அடக்கியவனுக்கு உரியவள்.

இப்படி ஏழு பெண்களை நிறுத்தி, ஏழு காளைமாடுகளைச் சொல்லிக் காட்டி குரவை ஆடத் தொடங்கினாள்.

**ஏழு இசை நரம்பின் பெயர்**

*ஆங்கு,*
*தொழுவிடை ஏறு குறித்து வளர்த்தார்*
*ஏழுவர் இளங் கோதையார்,-*
*என்று, தன் மகளை நோக்கி,*
*தொன்று படு முறையான் நிறுத்தி,*
*இடை முதுமகள் இவர்க்குப்*
*படைத்துக் கோள் பெயர் இடுவாள்;*
*குடமுதல் இடமுறையா, குரல், துத்தம்,*

*கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம், என,*
*விரி தரு பூங் குழல் வேண்டிய பெயரே.*

இவ்வாறு ஏழு பெண்களைக் குரவை ஆட நிறுத்தி, அவர்களை ஏறு தழுவக் காளை வளர்த்தவர்கள் என்று சொல்லி அந்த ஏழு பெண்களுக்கும் தான் படைத்த பெயர்களைச் சூட்டினாள்.
தன் மகளை இடப்பக்கம் நிறுத்தி, அவளிடமிருந்து தொடங்கிப் பெயர்களைச் சூட்டினாள்.

1. குரல்,
2. துத்தம்,
3. கைக்கிளை,
4. உழை,
5. இளி,
6. விளரி,
7. தாரம்,

எனப் பெயர் சூட்டினாள்.

*மாயவன் என்றாள், குரலை; விறல் வெள்ளை-*
*ஆயவன் என்றாள், இளி-தன்னை; ஆய் மகள்*
*பின்னை ஆம் என்றாள், ஓர் துத்தத்தை; மற்றையார்*
*முன்னை ஆம் என்றாள் முறை.*
*மாயவன் சீர் உளார், பிஞ்ஞையும் தாரமும்;*
*வால் வெள்ளை சீரார், உழையும் விளரியும்;*
*கைக்கிளை பிஞ்ஞை இடத்தாள்; வலத்து உளாள்,*
*முத்தைக்கு நல் விளரி-தான்*
*அவருள்,*
*வண் துழாய் மாலையை மாயவன் மேல் இட்டு,*
*தண்டாக் குரவை-தான் உள்படுவாள், கொண்ட சீர்*
*வையம் அளந்தான்-தன் மார்பில் திரு நோக்காப்*
*பெய் வளைக் கையாள் நம் பின்னை-தான் ஆம் என்றே,*
*‘ஐ!’ என்றாள், ஆயர் மகள்,*

குரல் - மாயவன்

இளி - வெள்ளையன் (வெள்ளை நிறப் பலராமன்)
துத்தம் - நப்பின்னை (இராதை) (பிஞ்ஞை)
மற்றையார் முறைப்படி அவர்களுக்கு முன்னே நின்றனர்.
மாயவன் சீர் வரிசையில் பின்னையும் தாரமும் நின்றனர்.
வெள்ளையன் சீர் வரிசையில் உழையும், விளரியும் நின்றனர்.
கைக்கிளை பிஞ்ஞைக்கு இடப்புறம் நின்றாள்.
விளரி முந்தை (அண்ணன்) வெள்ளையனுக்குத் துணையாக நின்றாள்.
துளசி மாலையை மாயவன் மேல் போட்டனர்.
குரவை ஆட்டம் தொடங்கியது.
வையம் அளந்த மாயவன் மார்பில் திருமகள் (நப்பின்னை) சாய்ந்தாள்.
"ஐ" என்று மாதரி ஒலித்தாள்.
ஏழு பேரும் சேர்ந்து கைகளைக் கோத்துக்கொண்டு குரவை ஆடினர்.

**கூத்து உள்படுதல்"**

*அவர்-தாம்*
*செந்நிலை மண்டிலத்தான், கற்கடகக் கை கோஒத்து,*
*அந் நிலையே ஆடல் சீர் ஆய்ந்துளார், முன்னைக்*
*குரல்-கொடி தன் கிளையை நோக்கி, 'பரப்பு உற்ற*
*கொல்லைப் புனத்துக் குருந்து ஒசித்தான் பாடுதும்,*
*முல்லைத் தீம் பாணி' என்றாள்.*
*எனா,*
*குரல் மந்தம் ஆக, இளி சமன் ஆக,*
*வரன்முறையே, துத்தம் வலியா, உரன் இலா*
*மந்தம் விளரி பிடிப்பாள், அவள் நட்பின்*
*பின்றையைப் பாட்டு எடுப்பாள்.*



கற்கடகக் கை கோத்து ஆடினர்




இசை - நட்பு நரம்புகள்

அவர்கள் சரியான வட்டத்தில் நண்டுப் பிடி போல் கைகளைக் கோத்துக்கொண்டு சீராக ஆடத் தொடங்கினர்.

முதலில் குரல் என்று பெயரிடப்பட்ட பெண் தன் கிளை (உறவு முறையாள்) துத்தத்தை நோக்கி (மாயவன் தன் உறவு முறையாள் நப்பின்னையை நோக்கி, கொல்லையில் குருந்த மரத்தைச் சாய்த்தவன் சீரை முல்லைப் பண்ணால் பாடுவோம் என்றாள்.

அவள் அவ்வாறு கூறியதும்
குரல் நரம்பு மந்தமாக ஒலிப்பது போலவும்,
இளி நரம்பு சமமாக ஒலிப்பது போலவும்,
துத்தம் நரம்பு வலிமையாக ஒலிப்பது போலவும்,
விளரி நரம்பு மந்தமாக ஒலிப்பது போலவும்
நட்பு நரம்புகள் (நரம்புகளின் பெயர் சூட்டப்பட்ட மகளிர்) பாடத் தொடங்கின.

## பாட்டு

*கன்று குணிலாக் கனி உதிர்த்த மாயவன்*
*இன்று நம் ஆனுள் வருமேல், அவன் வாயில்*
*கொன்றை அம் தீம் குழல் கேளாமோ, தோழீ!*

*பாம்பு கயிறாக் கடல் கடைந்த மாயவன்*

*ஈங்கு நம் ஆனுள் வருமேல், அவன் வாயில்*
*ஆம்பல் அம் தீம் குழல் கேளாமோ, தோழீ!*

*கொல்லை அம் சாரல் குருந்து ஒசித்த மாயவன்*
*எல்லை நம் ஆனுள் வருமேல், அவன் வாயில்*
*முல்லை அம் தீம் குழல் கேளாமோ, தோழீ!*

தன்னைக் கொல்லக் கன்றுக்குட்டி உருவில் வந்தவனை காய் உதிர்க்கும் வளைதடியாகத் தூக்கி எறிந்து விளாம்பழத்தை உதிர்த்த மாயவன் இன்று நம் ஆனிரைகளைக் காக்க வருவானாகில் அவன் ஊதும் கொன்றைக் காயால் செய்யப்பட்ட குழலின் இசையைக் கேட்கலாமே, தோழி!

பாம்பினைக் கயிறாக்கிக்கொண்டு கடலைக் கடைந்த மாயவன் இன்று நம் ஆணிரைகளைக் காக்க வருவானே\ஆனால் அவன் ஊதும் ஆம்பல் கொடித் தண்டினால் செய்த குழலின் இசையைக் கேட்கலாமே, தோழி!

குருந்த மரமாக நின்ற பகவர்களை ஒடித்த மாயவன் இன்று நம் ஆனிரைகளைக் காக்க வருவானாயின் அவன் ஊதும் முல்லைப் பண்ணைக் கேட்கலாமே, தோழி!

**மாயவன் - நப்பின்னை - சாயல்**

*தொழுனைத் துறைவனோடு ஆடிய பின்னை-*
*அணி நிறம் பாடுகேம் யாம்.*

*இறும் என் சாயல் நுடங்க நுடங்கி*
*அறுவை ஒளித்தான் வடிவு என்கோ யாம்?*
*அறுவை ஒளித்தான் அயர, அயரும்*
*நறு மென் சாயல் முகம் என்கோ யாம்?*

*வஞ்சம் செய்தான் தொழுனைப் புனலுள்*
*நெஞ்சம் கவர்ந்தாள் நிறை என்கோ யாம்?*
*நெஞ்சம் கவர்ந்தாள் நிறையும் வளையும்*
*வஞ்சம் செய்தான் வடிவு என்கோ யாம்?*

*தையல் கலையும் வளையும் இழந்தே*
*கையில் ஒளித்தாள் முகம் என்கோ யாம்?*

*கையில் ஒளித்தாள் முகம் கண்டு அழுங்கி,*
*மையல் உழந்தான் வடிவு என்கோ யாம்?*

யமுனைத் துறைவன் மாயவனோடு காதல் ஆட்டம் ஆடிய நப்பின்னையின் அழகினைப் பாடுவோம்.

என் மேனி அழகெல்லாம் வளைந்தாடும்படி என் ஆடைகளைக் கவர்ந்து சென்றானே, அவன் சாயல் முகம் கொண்டவள் நப்பின்னை என்று பாடுவோமா?

யமுனை நீரில் நின்ற ஆய்ச்சியருக்கு வஞ்சம் செய்தானே அந்த மாயவனின் நெஞ்சத்தைக் கவர்ந்தாளே, நப்பின்னை, அவள் நிறைதான் நிறை என்று போற்றிப் பாடுவோமா?

ஆடையையும், வளையலையும் இழந்து, நாணத்துடன் கைகளால் தன் கண்களைப் பொத்திக்கொண்டு ஒளிந்துகொண்டாளே. அவள் முகத்ததைக் கண்டு ஆசை கொண்டானே, அவன் அழகுதான் அழகு, என்று போற்றிப் பாடுவோமா?

### குரவை - ஆடுவார் நிலை

*கதிர் திகிரியான் மறைத்த கடல் வண்ணன் இடத்து உளான்,*
*மதி புரையும் நறு மேனித் தம்முனோன் வலத்து உளாள்,*
*பொதி அவிழ் மலர்க் கூந்தல் பிஞ்ஞை: சீர் புறங்காப்பார்*
*முது மறை தேர் நாரதனார் முந்தை முறை நரம்பு உளர்வார்.*

*மயில் எருத்து உறழ் மேனி மாயவன் வலத்து உளாள்,*
*பயில் இதழ் மலர் மேனித் தம்முனோன் இடத்து உளாள்,*
*கயில் எருத்தம் கோட்டிய நம் பின்னை: சீர் புறங்காப்பார்*
*குயிலுவருள் நாரதனார் கொளை புணர் சீர் நரம்பு உளர்வார்*

மாயவன் இடப்பக்கம் நின்றான்.
வெள்ளையன் வலப்பக்கம் நின்றான்.
பிஞ்ஞை என்னும் நப்பின்னை ஆடுகிறாள்.
நாரதர் யாழ் இசைக்கிறார்.
குரவைக் கூத்து இப்படி நடைபெறுகிறது.

**ஆடுநர்ப் புகழ்தல்**

*மாயவன் தம்முன்னினொடும், வரிவளைக் கைப் பின்னையொடும்,*
*கோவலர் - தம் சிறுமியர்கள் குழல் கோதை புறம்சோர,*
*ஆய் வளைச் சீர்க்கு அடி பெயர்த்திட்டு அசோதையார் தொழுது ஏத்த,*
*தாது எரு மன்றத்து ஆடும் குரவையோ தகவு உடைத்தே.*

மாயவனும் அவன் முன்னோன் வெள்ளையனும் பார்த்துக்கொண்டிருக்க, நப்பின்னையோடு சேர்ந்து சிறுமியர் கூந்தல் பின்புறம் அசைந்தாடக் குரவை ஆடுகின்றனர். தாதெரு மன்றத்தில் (பூக்கள் கொட்டிக் கிடக்கும் மன்றத்தில்) இவர்கள் ஆடும் ஆட்டம் தகைமை சான்று விளங்கியது.

**சேரன் சோழன் பாண்டியன் - வெற்றி - வாழ்த்து**

*எல்லாம் நாம்,*
*புள் ஊர் கடவுளைப் போற்றுதும், போற்றுதும்*
*உள்வரிப் பாணி ஒன்று உற்று.*

**உள்வரி வாழ்த்து**

**பூவை நிலை**

*கோவா மலை ஆரம், கோத்த கடல் ஆரம்,*
*தேவர் கோன் பூண் ஆரம், தென்னர் கோன் மார்பினவே:*
*தேவர் கோன் பூண் ஆரம் பூண்டான் செழுந் துவரைக்*
*கோ குலம் மேய்த்து, குருந்து ஒசித்தான் என்பரால்.*

*பொன் இமயக் கோட்டுப் புலி பொறித்து மண் ஆண்டான்,*
*மன்னன் வளவன், மதில் புகார் வாழ் வேந்தன்:*
*மன்னன் வளவன், மதில் புகார் வாழ் வேந்தன்*
*பொன் அம் திகிரிப் பொரு படையான் என்பரால்,*

*முந்நீரினுள் புக்கு, மூவாக் கடம்பு எறிந்தான்,*
*மன்னர் கோச் சேரன், வள வஞ்சி வாழ் வேந்தன்:*
*மன்னர் கோச் சேரன், வள வஞ்சி வாழ் வேந்தன்*
*கல் நவில் தோள் ஓச்சி, கடல் கடைந்தான் என்பரால்.*

குரவை ஆடும் பெண்கள் எல்லாருமாகச் சேர்ந்து மாயவனையும்

மூவேந்தரையும் வாழ்த்திப் பாடுவோம் என்று சொல்லிக்கொண்டு வாழ்த்துகின்றனர்.

கருடப் பறவை மேல் செல்லும் உள்ளத்தில் இருத்தி, மூவேந்தரைப் பாடுவோம் - என்கின்றனர்.

கோக்காத சந்தன மாலையும், கோத்த முத்து மாலையும் தேவர் கோன் இந்திரன் மாலையையும் தென்னவன் தன் மார்பில் சூடிக்கொண்டான். அவனை, குருந்த மரம் சாய்த்த கண்ணன் என்று சொல்கின்றனர்.

புகார் அரசன் வளவன் இமயத்தில் தன் புலிச்சின்னத்தைப் பொறித்தான். அவனைச் சக்கரப் படை கொண்ட திருமால் என்கின்றனர்.

வஞ்சி அரசன் சேரன் கடலில் படையுடன் சென்று கடம்பர்களின் கடம்பு மரத்தை வெட்டினான். அவனைக் கடல் கடைந்த மாயவன் என்கின்றர்.

**மாயவன் மாயம்**

*வடவரையை மத்து ஆக்கி, வாசுகியை நாண் ஆக்கி,*
*கடல் வண்ணன்! பண்டு ஒரு நாள் கடல் வயிறு கலக்கினையே:*
*கலக்கிய கை அசோதையார் கடை கயிற்றால் கட்டுண் கை:*
*மலர்க் கமல உந்தியாய்! மாயமோ? மருட்கைத்தே!*

*‘அறு பொருள் இவன்’ என்றே, அமரர் கணம் தொழுது ஏத்த,*
*உறு பசி ஒன்று இன்றியே, உலகு அடைய உண்டனையே:*
*உண்ட வாய் களவினான் உறி வெண்ணெய் உண்ட வாய்:*
*வண் துழாய் மாலையாய்! மாயமோ? மருட்கைத்தே!*

*திரண்டு அமரர் தொழுது ஏத்தும் திருமால்! நின் செங் கமல*
*இரண்டு அடியான் மூ-உலகும் இருள் தீர நடந்தனையே;*
*நடந்த அடி பஞ்சவர்க்குத் தூது ஆக நடந்த அடி;*
*மடங்கலாய்! மாறு அட்டாய்! மாயமோ? மருட்கைத்தே!*

மேரு மலை மத்து, வாசுகிப் பாம்பு கடையும் கயிறு. இப்படி வைத்துக்கொண்டு பால்-கடலைக் கடைந்து அதன் வயிற்றைக்

கலக்கினாயே. அத்தகைய உன் வலிமை அசோதை தயிர் கடையும் கயிற்றால் உன்னைக் கட்டி மத்தால் அடித்தபோது கட்டுப்பட்டுக் கிடந்தாயே, அந்த மாயம் எங்களை வியப்படையச் செய்கிறது.

இவன் ஏதுமற்ற பொருள் என்று தேவர்கள் உன்னைப் புகழ்கின்றனர். நீயோ பசி ஒன்றும் இல்லாமலேயே உலகம் முழுவதையும் உண்டுவிட்டாய். அது போதாதா? உறியில் வெண்ணெய் திருடி உண்டாயே, இந்த மாயம் எங்களை வியப்படையச் செய்கிறது. .

தேவர்கள் திருமால் என்று உன்னைப் புகழ்கின்றனர். நீ உன் இரண்டு தப்படிகளால் மூன்று உலகையும் அளந்து காட்டினாய். அப்படிப்பட்ட காலடிகள் பஞ்ச பாண்டவருக்குத் தூதாக நடந்து சென்ற மாயம் எங்களுக்கு வியப்பாக உள்ளது.

### மாயவன் புகழ்

*மூ-உலகும் ஈர் அடியான் முறை நிரம்பாவகை முடியத்*
*தாவிய சேவடி சேப்ப, தம்பியொடும் கான் போந்து,*
*சோ அரணும் போர் மடிய, தொல் இலங்கை கட்டு அழித்த*
*சேவகன் சீர் கேளாத செவி என்ன செவியே?*
*திருமால் சீர் கேளாத செவி என்ன செவியே?*

*பெரியவனை; மாயவனை; பேர் உலகம் எல்லாம்*
*விரி கமல உந்தி உடை விண்ணவனை; கண்ணும்,*
*திருவடியும், கையும், திரு வாயும், செய்ய*
*கரியவனை; காணாத கண் என்ன கண்ணே?*
*கண் இமைத்துக் காண்பார்-தம் கண் என்ன கண்ணே?*

*மடம் தாழும் நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சம்*
*கடந்தானை; நூற்றுவர்பால் நால் திசையும் போற்ற,*
*படர்ந்து ஆரணம் முழங்க, பஞ்சவர்க்குத் தூது*
*நடந்தானை; ஏத்தாத நா என்ன நாவே?*
*'நாராயணா!' என்னா நா என்ன நாவே?*

மூன்று உலகங்களையும் இரண்டு தப்படிகளால் அளந்த திருவடி தம்பி இலக்குவனோடு காட்டுக்குச் சென்று இலங்கையை அழித்ததே, அந்தச் சேவகன் புகழைக் கேட்காத செவி என்ன பயன் பெற்ற செவி?

உலகளந்த பெரியவனை; மாயம் செய்யும் மாயவனை; உலகமாக விரிந்துள்ள தாமரை வயிற்றறை உடைய விண்ணவனை; கண், அடி, கை, வாய் நான்கும் சிவந்திருப்பவனை, கரியவனை, காணாத கண் என்ன கண்?

கஞ்சனார் வஞ்சம் கடந்தானை, நூற்றுவர்பால் பஞ்ச பாண்டவர்க்குத் தூது நடந்தானை, புகழாத நாக்கு என்ன நாக்கு? நாராயணா என்று சொல்லாத நாக்கு என்ன நாக்கு?

**பாண்டியனை வாழ்த்தல்**

*என்று, யாம்*
*கோத்த குரவையுள் ஏத்திய தெய்வம் நம்*
*ஆத்தலைப் பட்ட துயர் தீர்க்க! வேத்தர்*
*மருள, வைகல் வைகல் மாறு அட்டு,*
*வெற்றி விளைப்பது மன்னோ கொற்றத்து*
*இடிப் படை வானவன் முடித்தலை உடைத்த*
*தொடித் தோள் தென்னவன் கடிப்பு இகு முரசே!*

மாதரி சொல்கிறாள்.
குரவை ஆட்டத்தில் கோத்துப் பாடிய தெய்வம் எங்கள் ஆனிரைகளைக் காக்க வேண்டும்.
வேந்தன் நாள்தோறும் பகைவரை அழித்து வெற்றியை விளைவிக்க வேண்டும்.
என வாழ்த்தினர்.
தன் வெற்றியை நிலைநாட்டத் தேவந்திரன் தலைமுடியில் தன் கை வளையலை உடைத்தவன் தென்னவன் முரசு அப்போது முழங்கிற்று.

## மணிமேகலை

மணிமேகலை சிலப்பதிகாரத்தோடு தொடர்புடையது என்பர். சிலம்பைப் போல் இந்நூல் பெண்ணைக் கதைத்தலைவியாகக் கொண்டு இயற்றப்பட்டுள்ளது. மாதவிக்கும் கோவலனுக்கும் பிறந்த குழந்தையே மணிமேகலை இவளே காப்பியத் தலைவி. இந்நூல் பௌத்த சமயத்தை அடியொற்றி எழுதப்பட்டுள்ளது. இதுவே தமிழில் தோன்றிய

முதல் சமயக் காப்பியம். இதற்கு 'மணிமேகலை துறவு' என்ற வேறு பெயரும் உண்டு.

**ஆசிரியர் குறிப்பு:**

மணிமேகலையின் ஆசிரியர் சீத்தலைச் சாத்தனார். இவர் சங்க காலத்தில் வாழ்ந்த புலவர்களில் ஒருவர். சீத்தலை என்பது இவர் ஊராகச் சொல்லப்படுகிறது. இவர்காலம் கி.பி. 2 ஆம் நூற்றாண்டு. பெற்றோர் அறியப்படவில்லை. ஆனால், வாணிபத் தொழில் செய்யப்பட்டுள்ளது அறிய முடிகிறது. தண்டமிழ்ச் சாத்தன், தண்டமிழ்ப் புலவன் என்ற வேறு பெயர்களும் சாத்தனாருக்கு உண்டு.

**நூலமைப்பு:**

இதில் காண்டப் பிரிவுகள் இல்லை ஆனால் சிலம்பைப் போன்று 30 கதைகளைக் கொண்டுள்ளது. விழாவறைக் காதையில் தொடங்கி பவத்திறம் அறுக எனப் பாவை நோற்ற காதையில் முடிகிறது. ஆசிரியப்பாவால் ஆனது. 4286 அடிகளைக் கொண்டது.

### சித்திர தெய்வம் கூறல்

*முதியாள் திருந்து அடி மும்மையின் வணங்கி*
*மதுமலர்த் தாரோன் வஞ்சினம் கூற*
*ஏடுஅவிழ் தாரோய் எம்கோ மகள்முன்*
*நாடாது துணிந்து நா நல்கூர்ந் தனையென*
*வித்தகர் இயற்றிய விளங்கிய கைவினைச்*
*சித்திரம் ஒன்று தெய்வம் கூறலும்,*

தேவதைகளில் முதியவளாகிய சம்பாபதி தெய்வத்தை மூன்று முறை வணங்கி மணிமேகலையைத் தனக்குத் தரும்படி பாடுகிடந்தான்.

அப்போது சம்பாபதி தெய்வம் அவனுக்குக் கூறிற்று.

பூ மாலை அணிந்தவ்வனே! மணிமேகலை என் கோமகள். எண்ணிப் பார்க்காமல் அவளை அடையத் துணிந்து வாடுகிறாய். அவர் கலை வல்லான் ஒருவன் இயற்றிய சித்திரம் போன்ற ஒப்பற்ற தெய்வம் என்பதைத்

தெரிந்துகொள் - என்றது.
அதனைப் கேட்ட உதயகுமரன் ஒருவாறு தெளிவு பெற்றான்.

## வியப்பும் பெயர்வும்

*உதய குமரன் உள்ளம் கலங்கிப்*
*பொதியறைப் பட்டோர் போன்றுமெய் வருந்தி*
*அங்குஅவள் தன்திறம் அயர்ப்பாய் என்றே*
*செங்கோல் காட்டிய தெய்வமும் திப்பியம்*
*பைஅரவு அல்குல் பலர்பசி களையக்*
*கையில் ஏந்திய பாத்திரம் திப்பியம்*
*முத்தை முதல்வி அடிபிழைத் தாய்எனச்*
*சித்திரம் உரைத்த இதூஉம் திப்பியம்*
*இந்நிலை எல்லாம் இளங்கொடி செய்தியின்*
*பின்அறி வாம்எனப் பெயர்வோன் தன்னை*

சம்பாபதி தெய்வத்தின் வாக்கைக் கேட்ட உதயகுமரன் புழுக்கறையில் அடைக்கப்பட்டவன் போலத் துன்றுற்றான்.
இவளைப் பற்றித் தெய்வம் கூறிச் செங்கோலுக்கு வழி காட்டிய தெய்வ வாக்கு ஆச்சரியமாக உள்ளது.
இந்த அழகி பலருடைய பசியைப் போக்கக் கையில் வைத்திருக்கும் பாத்திரம் ஆச்சரியமாக உள்ளது.
இவளுக்குத் துன்பம் செய்கிறாய் - என்று கந்திற்பாவை சொன்னதும் ஆச்சரியமாக உள்ளது.
இவற்றை எல்லாம் பின்னர் அறிந்துகொள்ளலாம் என்று எண்ணிக்கொண்டு உதயகுமரன் திரும்பிவிட்டான்.

## பெருமூச்சுடன் உதயணன் செல்லல்

*அகல்வாய் ஞாலம் ஆர்இருள் உண்ணப்*
*பகல்அரசு ஓட்டிப் பணைஎழுந்து ஆர்ப்ப*
*மாலை நெற்றி வான்பிறைக் கோட்டு*
*நீல யானை மேலோர் இன்றிக்*
*காமர் செங்கை நீட்டி வண்டுபடு*
*பூநாறு கடாஅம் செருக்கிக் கால்கிளர்ந்து*
*நிறைஅழி தோற்றமொடு தொடர முறைமையின்*

*நகர நம்பியர் வளையோர் தம்முடன்*
*மகர வீணையின் கிளைநரம்பு வடித்த*
*இளிபுணர் இன்சீர் எஃகுஉளம் கிழிப்பப்*
*பொறாஅ நெஞ்சில் புகைஎரி பொத்திப்*
*பறாஅக் குருகின் உயிர்த்துஅவன் போயபின்,*

*உறையுள் குடிகை உள்வரிக் கொண்ட*
*மறுஇல் செய்கை மணிமே கலைதான்*
*மாதவி மகளாய் மன்றம் திரிதரின்*
*காவலன் மகனோ கைவிட லீயான்*
*காய்பசி யாட்டி காயசண் டிகைஎன*
*ஊர்முழுது அறியும் உருவம் கொண்டே*
*ஆற்றா மாக்கட்கு ஆற்றும் துணையாகி*

உதயகுமரன் திரும்பும்போது இருள் கௌவியது. பகல் என்னும் அரசனை ஓட்டிவிட்டு, மாலைக் காலமாகிய யானை தன் பிறைநிலாக் கொம்பைக் காட்டிக்கொண்டு, யானையை நடத்தும் பாகன் இல்லாமல், தன் கைகளை நீட்டி, அதன் மத நீரைப் பருகுவது போல வண்டுகள் சூழ்ந்து வர, நிறைவுடைமை இல்லாமல் மாலைக்காலம் வந்தது. - நிறை அழிந்த உதயகுமரன் போல வந்தது.

நகரத்தில் உள்ள நம்பியர் வளையலணிந்த மகளிருடன் மகர வீணையின் நரம்பு பேசுவது போல உரையாடிக்கொண்டிப்பதைக் கண்ட உதயகுமரன் பொறாமை கொண்ட தன் நெஞ்சம் கொல்லன் துருத்தி போலப் பெருமூச்சு விடத் திரும்பிச் சென்றுகொண்டிருந்தான்.

மணிமேகலை தன் உருவத்தைச் சம்பாபதி குடிகை (குகை) கோயிலில் மாற்றிக்கொண்டாள். மாதவி மகள் உருவத்தில் இருந்தால் உதயகுமரன் விட்டுவைக்க மாட்டான் என்று எண்ணினாள்.

தீராப் பசியோடு திரிந்த காயசண்டிகையை ஊர் முழுவதும் அறிந்திருந்தது. அவளது உருவத்தைத் தாங்கிக்கொண்டு உணவில்லா மக்களுக்கு உணவு வழங்கிவந்தாள்.

## மணிமேகலை சுற்றிதிரிதல்

*ஏற்றலும் இடுதலும் இரப்போர் கடன்அவர்*
*மேற்சென்று அளித்தல் விழுத்தகைத்து என்றே*
*நூற்பொருள் உணர்ந்தோர் நுனித்தன ராம்என*
*முதியாள் கோட்டத்து அகவயின் இருந்த*
*அமுத சுரபியை அங்கையின் வாங்கிப்*
*பதிஅகம் திரிதரும் பைந்தொடி நங்கை*

*அதிர்கழல் வேந்தன் அடிபிழைத் தாரை*
*ஒறுக்கும் தண்டத்து உறுசிறைக் கோட்டம்*

*விருப்பொடும் புகுந்து வெய்துஉயிர்த்துப் புலம்பி*
*ஆங்குப் பசிஉறும் ஆர்உயிர் மாக்களை*
*வாங்கு கையகம் வருந்தநின்று ஊட்டலும்,*

பிச்சை வாங்குதலும், வாங்கிய பிச்சையைப் பகிர்தளித்தலும் பிச்சை எடுப்போரின் விழுமிய கடமை நூல் வல்லோர் கூறியுள்ளனர் என்பதை மணிமேகலை நினைத்துப் பார்த்தாள். எனவே சம்பாபதி கோட்டத்தில் வைத்திருந்த தன் அமுதசுரபியைக் கையில் எடுத்துக்கொண்டாள். ஊர் முழுவதும் திரிந்து உணவு வாங்கினாள்.

வேந்தன் தன் ஆணைக்கு அடங்காதவரைச் சிறையில் வைத்திருந்தான். அங்குச் சென்றாள். அவர்களின் பசியைப் போக்கினாள். உணவு வாங்கும் சிறைக் கைதிகளின் கைகள் வாங்கி வாங்கி வருந்தும் அளவுக்கு உணவு வழங்கினாள்.

*ஊட்டிய பாத்திரம் ஒன்றுஎன வியந்து*
*கோட்டம் காவலர் கோமகன் தனக்குஇப்*
*பாத்திர தானமும் பைந்தொடி செய்தியும்*
*யாப்புடைத் தாக இசைத்தும்என்று ஏகி,*

ஒரு பாத்திரத்தை வைத்துக்கொண்டு அத்தனைப் பேருக்கும் உணவு வழங்குகிள் ஒருத்தி என்னும் வியப்புக்கு உரிய செய்தியை மன்னனுக்குத் தெரிவிப்போம் என்று சிறைக்கோட்டக் காவலாளிகள் சென்று, மன்னனுக்குத் தெரிவித்தனர்.

## அரசன் பூம்பொழில் புகுதல்

*நெடியோன் குறள்உரு வாகி நிமிர்ந்துதன்*
*அடியின் படியை அடக்கிய அந்நாள்*
*நீரின் பெய்த மூரி வார்சிலை*
*மாவலி மருமான் சீர்கெழு திருமகள்*
*சீர்த்தி என்னும் திருத்தகு தேவியொடு*
*போதுஅவிழ் பூம்பொழில் புகுந்தனன் புக்குக்*

நெடியோனாகிய திருமால் குள்ள உருவம் கொண்டவனாக, பாணர் மன்னன் மாபலியிடம் சென்று அவனிடம் மூன்று கால் தப்படி அளவு தானமாகப் பெற்று, அவன் ஆண்ட மூன்று உலகங்களையும் இரண்டு தப்படிகளால் அளந்துவிட்டு, மூன்றாம் தப்படியாக மாபலி மன்னனின் தலையில் காலை வைத்து அளந்து அவனைக் கொன்றான்.

அதன் பின்னர் மாவலி மன்னனின் மகள் சீர்த்தி என்பாளுடன் சேர்ந்துகொண்டு அங்கிருந்த பொழிலுக்குச் சென்றான்.

*கொம்பர்த் தும்பி குழலிசை காட்டப்*
*பொங்கர் வண்டினம் நல்லியாழ் செய்ய*
*வரிக்குயில் பாட மாமயில் ஆடும்*
*விரைப்பூம் பந்தர் கண்டுஉளம் சிறந்தும்,*

*புணர்துணை நீங்கிய பொய்கை அன்னமொடு*
*மடமயில் பேடையும் தோகையும் கூடி*
*இருசிறை விரித்துஆங்கு எழுந்துடன் கொட்பன*
*ஒருசிறைக் கண்டுஆங்கு உள்மகிழ்வு எய்தி*
*மாமணி வண்ணனும் தம்முனும் பிஞ்ஞையும்*
*ஆடிய குரவைஇஃது ஆம்என நோக்கியும்,*

*கோங்குஅலர் சேர்ந்த மாங்கனி தன்னைப்*
*பாங்குஉற இருந்த பல்பொறி மஞ்ஞையைச்*
*செம்பொன் தட்டில் தீம்பால் ஏந்திப்*
*பைங்கிளி ஊட்டும்ஓர் பாவையாம் என்றும்,*

*அணிமலர்ப் பூம்பொழில் அகவயின் இருந்த*
*பிணவுக்குரங்கு ஏற்றிப் பெருமதர் மழைக்கண்*
*மடவோர்க்கு இயற்றிய மாமணி ஊசல்*
*கடுவன் ஊக்குவது கண்டுநகை எய்தியும்,*

*பாசிலை செறிந்த பசுங்கால் கழையொடு*
*வால்வீச் செறிந்த மராஅம் கண்டு*
*நெடியோன் முன்னொடு நின்றன னாம்எனத்*
*தொடிசேர் செங்கையில் தொழுதுநின்று ஏத்தியும்*

அப்போது நட்டை ஆண்ட சோழன் மாவண் கிள்ளி.
அவன் மலர்ப் பூங்காவில் மகிழ்ந்திருந்தான்.
மலர்க்கொம்புகளில் தும்பி இன வண்டுகள் புல்லாங்குழல் போல இசை பாடிக்கொண்டிருந்தன.
குயில்கள் பாட மயில்கள் ஆடிக்கொண்டிருந்தன.
அவன் பூப் பந்தலில் அமர்ந்து உள்ளக் களிப்போடு இருந்தான்.

தன் துணையை விட்டு நீங்கிய அன்னம் ஒன்று அங்கிருந்த பெண்மயிலோடு கூடி ஒன்றை ஒன்று சுற்றி வந்துகொண்டிருந்தது.

இது மணிவண்ணன் கண்ணன், அவன் அண்ணன் பலராமன், பிஞ்ஞை (நப்பின்னை) ஆகியோர் ஆடும் குரவைக் கூத்து போல் அவனுக்குத் தோன்றியது.

கோங்கம் பூ, மாம்பழம், மயில் ஆகியவை அருகருகில் இருந்ததைப் பார்த்து பெண் ஒருத்தி பொன் தட்டில் பாலை வைத்துக்கொண்டு கிளிக்கு ஊட்டுவது போல் அவனுக்குத் தோன்றியது.

மகளிர் ஆடும் ஊஞ்சலில் தன் பெண் குரங்கை ஏற்றிவிட்டு ஆண் குரங்கு ஆட்டிவிடுவதைப் பார்த்துச் சிரித்துக்கொண்டிருந்தான்.

பசுமையான இலைகளுடன் மராம் மரம் நிற்பதைப் பார்த்து நெடியோனாகிய திருமால் நிற்கின்றான் என்று எண்ணித் தொழுதான்.

**மகளீரோடு களித்தல்**

*ஆடல் கூத்தினோடு அவிநயம் தெரிவோர்*
*நாடகக் காப்பிய நல்நூல் நுனிப்போர்*
*பண்ணியாழ் நரம்பில் பண்ணுமுறை நிறுப்போர்*
*தண்ணுமைக் கருவிக் கண்எறி தெரிவோர்*
*குழலொடு கண்டம் கொளச்சீர் நிறுப்போர்*
*பழுநிய பாடல் பலரொடு மகிழ்வோர்*
*ஆரம் பரிந்த முத்தம் கோப்போர்*
*ஈரம் புலர்ந்த சாந்தம் திமிர்வோர்*
*குங்கும வருணம் கொங்கையின் இழைப்போர்*
*அஞ்செங் கழுநீர் ஆய்இதழ் பிணிப்போர்*
*நல்நெடுங் கூந்தல் நறுவிரை குடைவோர்*
*பொன்னின் ஆடியின் பொருந்துபு நிற்போர்*
*ஆங்குஅவர் தம்மோடு அகல்இரு வானத்து*
*வேந்தனிற் சென்று விளையாட்டு அயர்ந்து,*

அங்கு இருந்த மக்கள் மன்னனிடம் சென்று அவனுடன் சேர்ந்து விளையாடினர்.
ஆடும் கூத்தியர், அவிநயம் காட்டுபவர், நாடக நூல் அறிந்தவர்கள், யாழ் இசைப்போர், தண்ணுமை முழக்குவோர், குழல் ஊதுவோர், வாய்பாட்டுப் பாடுவோர் முதலான இசைவாணர்கள் மன்னனை மகிழ்வித்துக்கொண்டிருந்தனர்.
மேலும் சிலர் ஆரத்தில் அறுந்துபோன முத்துக்களைக் கோத்துக்கொண்டிருந்தனர். சிலர் மார்பில் சந்தனம்

பூசிக்கொண்டிருந்தனர். சிலர் கொங்கையில் குங்குமம் பூசிக்கொண்டிருந்தனர். சிலர் கழுநீர்ப் பூ மாலை தொடுத்துக்கொண்டிருந்தனர். சிலர் தம் கூந்தலுக்கு மணம் ஊட்டிக்கொண்டிருந்தனர். சிலர் கண்ணாடி முன்னர் நின்றுகொண்டு தன்னைத் திருமகள் போல அழகுபடுத்திக்கொண்டிடிருந்தனர்.
இவர்கள் வேந்தனுடன் சேர்ந்து விளையாடினர்.

## செங்கை காட்டி நிற்றல்

*குருந்தும் தளவும் திருந்துமலர்ச் செருந்தியும்*
*முருகுவிரி முல்லையும் கருவிளம் பொங்கரும்*
*பொருந்துபு நின்று திருந்துநகை செய்து*
*குறுங்கால் நகுலமும் நெடுஞ்செவி முயலும்*
*பிறழ்ந்துபாய் மானும் இறும்புஅகலா வெறியும்*
*வம்மெனக் கூஉய் மகிழ்துணை யொடுதன்*
*செம்மலர்ச் செங்கை காட்டுபு நின்று*

*மன்னவன் தானும் மலர்க்கணை மைந்தனும்*
*இன்இள வேனிலும் இளங்கால் செல்வனும்*
*எந்திரக் கிணறும் இடுங்கல் குன்றமும்*
*வந்துவீழ் அருவியும் மலர்ப்பூம் பந்தரும்*
*பரப்புநீர்ப் பொய்கையும் கரப்புநீர்க் கேணியும்*
*ஒளித்துறை இடங்களும் பளிக்குஅறைப் பள்ளியும்*
*யாங்கணும் திரிந்து தாழ்ந்துவிளை யாடி,*

குருந்து, செம்முல்லை, செருந்தி, முல்லை, கருவிளம், பொங்கர் முரலான மலர்கள் சிரித்துக்கொண்டிருந்தன.
கீரிப்பிள்ளை, முயல், மான், வெறி ஆகிய விலங்குகள் தம் துணையை அழைத்து விளையாடிக்கொண்டிருந்தன.
அரசன் மாவண் கிள்ளி இவற்றைக் கைகாட்டி அழைத்து விளையாடிக்கொண்டிருந்தான்.

மன்னோடு சேர்ந்து காமன் விளையாடிக்கொண்டிருந்தான். வேனில் காலத் தென்றல் வீசியது. தண்ணீர் உற்றும் எந்திரக் கிணறு, கல் அடுக்கிய குன்றம், அதிலிருந்து வந்து விழும் அருவி, பூத்துக் குலுங்கும் பந்தல், .நீர் பரவிக் நிறுகும் பொய்கை, நீர் மறைந்திருக்கும் கேணி, ஒளிந்து விளையாடும் இடங்கள், பளிங்குக் கல்லால் ஆன அறைகள் முதலான இடங்களில் மன்னன் விளையாடினான்.

## அரசன் வீற்றிருத்தல்

*மகத வினைஞரும் மராட்டக் கம்மரும்*
*அவந்திக் கொல்லரும் யவனத் தச்சரும்*
*தண்தமிழ் வினைஞர் தம்மொடு கூடிக்*
*கொண்டுஇனிது இயற்றிய கண்கவர் செய்வினைப்*
*பவளத் திரள்கால் பன்மணிப் போதிகைத்*
*தவள நித்திலத் தாமம் தாழ்ந்த*
*கோணச் சந்தி மாண்வினை விதானத்துத்*
*தமனியம் வேய்ந்த வகைபெறு வனப்பின்*
*பைஞ்சேறு மெழுகாப் பசும்பொன் மண்டபத்து*
*இந்திர திருவன் சென்றுஇனிது ஏறலும்,*

மகத நாட்டுத் தொழில்நுட்பக் காரர்கள், மராட்டிய நாட்டுக் கலைஞர்கள், அவந்தி நாட்டுக் கொல்லர், யவன நாட்டு தச்சர் ஆகியோர் தமிழ் நாட்டுத் தொழில் நுட்பக்காரரோடு சேர்ந்து உருவாக்கிய மண்டபத்தில் மாவண் கிள்ளி இருந்தான். அந்த மண்டபம் பவளத்தாலான தூண்களைக் கொண்டிருந்தது. தூண் நின்ற திண்ணையில் முத்து மாலைகள் தொங்கவிடப்பட்டிருந்தன. கோணம் பொருந்தும் சந்தியில் விதானம் என்னும் மேல்கட்டி அமைக்கப்பட்டிருந்தது. மேல்கட்டி விரிப்பு பொன்னால் செய்யப்பட்டிருந்தது. அதில் சோழன் மாவண் கிள்ளி இந்திரன் போல எறி அமர்ந்து இருந்தான்.

## அரசனை வாழ்த்துதல்

*வாயிலுக்கு இசைத்து மன்னவன் அருளால்*
*சேய்நிலத்து அன்றியும் செவ்விதின் வணங்கி*
*எஞ்சா மண்நசைஇ இகல்உளம் துரப்ப*
*வஞ்சியின் இருந்து வஞ்சி சூடி*
*முறம்செவி யானையும் தேரும் மாவும்*
*மறம்கெழு நெடுவாள் வயவரும் மிடைந்த*
*தலைத்தார்ச் சேனையொடு மலைத்துத்தலை வந்தோர்*
*சிலைக்கயல் நெடுங்கொடி செருவேல் தடக்கை*
*ஆர்புனை தெரியல் இளங்கோன் தன்னால்*
*காரியாற்றுக் கொண்ட காவல் வெண்குடை*
*வலிகெழு தடக்கை மாவண் கிள்ளி*
*ஒளியொடு வாழி ஊழிதோறு ஊழி*
*வாழி எம்கோ மன்னவர் பெருந்தகை*
*கேள்இது மன்னோ கெடுகநின் பகைஞர்*

*யானைத் தீநோய்க்கு அயர்ந்துமெய் வாடிஇம்*
*மாநகர்த் திரியும்ஓர் வம்ப மாதர்*
*அருஞ்சிறைக் கோட்டத்து அகவயின் புகுந்து*
*பெரும்பெயர் மன்ன நின்பெயர் வாழ்த்தி*
*ஐயப் பாத்திரம் ஒன்றுகொண்டு ஆங்கு*
*மொய்கொள் மாக்கள் மொசிக்கஊண் சுரந்தனள்*
*ஊழிதோறு ஊழி உலகம் காத்து*
*வாழி எம்கோ மன்னவ என்றலும்,*

மணிமண்டபத்தில் இருந்த மாவண் கிள்ளியிடம்
சிறைக்கோட்டத்திலிருந்து வந்த காவலர் தெரிவித்தனர்.

அவர்கள் மணிமண்டப வாயில் காவலனிடம் சொல்லி ஒப்புதல் பெற்று உள்ளே சென்றர்.
தொலைவில் நின்று மன்னனை வணங்கி வாழ்த்தினர். மன்னனின் வெற்றிகளை எடுத்துரைத்தனர். மன்னன் இளங்கோவை யானை, தேர், குதிரை, மறவர் படைகளுடன் அனுப்பிக் காரியாறு என்னுமிடத்தில் நடந்த போரில் சேரனையும் பாண்டியனையும் வென்றான். தன் வெண்கொற்றக் குடையை விரித்து வீற்றிருந்தான்.
காரியாற்றில் வெண்குடை விரித்த வேந்தே! என்று காவலர் விளித்தனர்.
நீ உன் புகழுடன் ஊழூழி வாழவேண்டும் என வாழ்த்தினர்.
இந்தச் செய்தியைக் கேள் - என்று கூறினர்.
மன்ன! நின் பகைவர் கெடுக என மீண்டும் வாழ்த்தினர்.

யானைத்தீ பசி நோயால் வாடி இந்த மாநகரில் திரியும் ஒரு புதுமைப் பெண் (காயசண்டிகை) நம் சிறைச்சாலைக்குள் புகுந்து உன் பெயரைச் சொல்லி வாழ்த்திக்கொண்டு தன் கையில் இருக்கும் ஒரே பாத்திரத்தில் உள்ள சோற்றைக் கொண்டு அனைத்துச் சிறைக் கைதிகளின் பசியையும் போக்கிக்கொண்டிருக்கிறாள் - என்றனர்.

எம் மன்னவ! ஊழூழி தோறும் உலகம் காத்து வாழ்வாயாக என மீண்டும் காவலர்கள் வாழ்த்தினர்.

*வருக வருக மடக்கொடி தான்என்று*
*அருள்புரி நெஞ்சமொடு அரசன் கூறலின்*
*வாயி லாளரின் மடக்கொடி தான்சென்று*
*ஆய்கழல் வேந்தன் அருள்வா ழியஎனத்*

*தாங்குஅருந் தன்மைத் தவத்தோய் நீயார்*
*யாங்கா கியதுஇவ் ஏந்திய கடிஞைஎன்று*
*அரசன் கூறலும், ஆயிழை யுரைக்கும்*

"வருக வருக" என்று அரசன் மணிமேகலையை அருள் புரியும் நெஞ்சோடு வரவேற்றான். வாயிலாளர் மணிமேகலையை மன்னனிடம் அழைத்துச் சென்றனர். "ஆய் கழல் மன்னன் அருள் வாழிய" என மணிமேகலை மன்னனை வாழ்த்திக்கொண்டே சென்றாள். "பிறர் தாங்கமுடியாத தவநெறியை மேற்கொண்டிருப்பவளே! நீ யார்? உன் கையில் இருக்கும் பாத்திரம் எப்படி வந்தது என்று அரசன் கேட்டான். மணிமேகலை விளக்கலானாள்.

### பெருமை கூறல்

*விரைத்தார் வேந்தே நீநீடு வாழி*
*விஞ்சை மகள்யான் விழவுஅணி மூதூர்*
*வஞ்சம் திரிந்தேன் வாழிய பெருந்தகை*
*வானம் வாய்க்க மண்வளம் பெருகுக*
*தீதுஇன் றாக கோமகற்கு ஈங்குஈது*
*ஐயக் கடிஞை அம்பலம் மருங்குஓர்*
*தெய்வம் தந்தது திப்பிய மாயது*
*யானைத் தீநோய் அரும்பசி கெடுத்தது*
*ஊன்உடை மாக்கட்கு உயிர்மருந்து இதுஎன,*
*யான்செயற் பாலதுஎன் இளங்கொடிக்கு என்று*
*வேந்தன் கூற மெல்இயல் உரைக்கும்*
*சிறையோர் கோட்டம் சீத்துஅருள் நெஞ்சத்து*
*அறவோர்க்கு ஆக்கும் அதுவா ழியர்என,*

காயசண்டிகை உருவில் இருக்கும் மணிமேகலை கூறலானாள். மணக்கும் மாலை அணிந்த வேந்தனே! நீடூழி வாழ்வாயாக. நான் விஞ்சயன் ஒருவனின் மகள். விழாக்கோலம் பூண்டிருக்கும் உன் மூதூரில் ஏதோ திரிந்துகொண்டிருக்கிறேன். பெருந்தகைமை பூண்ட தாங்கள் வாழ வேண்டும். நாட்டில் நல்ல மழை பொழிய வேண்டும். மண் வளம் பெருக வேண்டும். அரசன் தீங்கின்றி வாழவேண்டும். இந்தத் தெய்வத் தன்மை உள்ள பாத்திரத்தை தெய்வம் எனக்குத் தந்தது. வியப்புக்கு உரிய இந்தப் பாத்திரம் என் "யானைத்தீ" என்னும் தீரா வயிற்றுப் பசியைப் போக்கியது. - என்று கூறினாள். "நான் செய்யவேண்டிய பணியை இந்த இளம்பெண் செய்கிறாள்" என்று மன்னன் அவளைப் பாராட்டினான். "சிறைச்சாலையை அறச்சாலையாக

மாற்றுங்கள். அறம் செய்வோரக்கு அது உதவட்டும். அறம் தழைக்கட்டும்" என்று மன்னன் ஆணையிட்டான்.

*அருஞ்சிறை விட்டுஆங்கு ஆயிழை உரைத்த*
*பெருந்தவர் தம்மால் பெரும்பொருள் எய்தக்*
*கறையோர் இல்லாச் சிறையோர் கோட்டம்*
*அறவோர்க்கு ஆக்கினன் அரசுஆள் வேந்துஎன்.*

அரசன் சிறையிலிருந்தவர்களை விடுதலை செய்தான். இந்தப் பெண் சொல்லும் அறிவுரையால் சிறையிலிருந்தவர்கள் கறை இல்லா மனத்தவர் ஆகட்டும். சிறைச்சாலை அறச்சாலையாக மாறட்டும் என்று ஆணையிட்டான்.